JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | 31/2015 |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | PW5 | Prosecution /Defence / Court | |
| Name | Vinothkumar | Caste | |
| Father's Name | Murugesan | Calling | |
| Village | Ramar Extension , Gobichettipalayam | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of
Date: 05.10.2021

முதல் விசாரணை

நான் மேற்படி விலாசத்தில் குடியிருந்துகொண்டு எலக்ட்ரீசியனாக வேலை செய்துவருகிறேன். கடந்த 07.12.2014 ஆம் தேதி காலை சுமார் 11.45 மணிக்கு நானும் எனது நண்பர் விக்னேஷ்-ம் கோபியிலிருந்து கள்ளிப்பட்டிக்கு சொந்தவேலையாக சென்றோம். அப்பொழுது கள்ளிப்பட்டி பாலத்தின் வடபுறம் கோபி காவல் ஆய்வாளர் வாகன சோதனையில் இருந்தார் அப்பொழுது எங்கள் இருவரையும் அழைத்து சோதனை செய்தார்கள். அந்த இடத்தில் கிஷோர் என்பவர் உடனிருந்தார். அப்பொழுது எதிரி கிஷோரை கைது செய்து விசாரணை செய்துகொண்டிருந்தார்கள். அப்பொழுது எதிரி கிஷோர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். தற்பொழுது நீதிமன்றத்தில் இடதிலிருந்து வலதுபுறமாக 4-வதாக அமர்ந்திருக்கும் நபர்தான் கிஷோர் ஆவார். மேற்படி கிஷோர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் இருவர் முன்னிலையில் பதிவு செய்துகொண்டனர். ஆஜர் எதிரி கிஷோர் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் இ ம்ரான் என்பவருடன் சேர்ந்து திருடியதாகவும் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்.

அதனடிப்படையில் மதியம் சுமார் 2.30 மணிக்கு ஆஜர் எதிரி கிஷோர் TG புதூர் நால்ரோட்டில் உள்ள வேப்பமர பஸ்டாப் அருகே எங்களை கூட்டிச்சென்றார். அங்கு இம்ரான் என்ற நபர் நின்றுகொண்டிருந்தார் அவரை ஆஜர் எதிரி கிஷோர் அடையாளம் காட்டினார். தற்பொழுது நீதிமன்றத்தில் இடதிலிருந்து வலதுபுறமாக 2-வதாக அமர்ந்திருப்பவர்தான் இம்ரான் ஆவார். பின்னர் இம்ரானை போலீசார் விசாரித்து கைது செய்தார்கள். அவரை கைது செய்து விசாரணை செய்தபோது அவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் போலீசார் பதிவு செய்துகொண்டனர். ஒப்புதல் வாக்குமூலத்தில்நானும் விக்னேஷ் என்பவரும் சாட்சி கையெழுத்து செய்தோம். இது குறித்து என்னை போலீசார் விசாரித்தனர். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1-வது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். **கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.3**. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**.,

சம்பவ சமயத்தில் நான் என்னுடைய இருசக்கர வாகனத்தில் TN-36-AC-4800 என்ற வாகனத்தில் சென்றேன். நான் ஓட்ட எனது நண்பர் விக்னேஷ் பின்னால் அமர்ந்து வந்தார். நான் சென்றபோது போலீசார் கிஷோர் - ஐ பிடித்து வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். நான் அந்த இடத்திற்கு செல்வதற்கு முன்னரே போலீசார் கிஷோரை பிடித்து வைத்திருந்ததால் அவர்கள் எப்பொழுது எந்த இடத்தில் வைத்து பிடித்து கைது செய்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆய்வாளர் அவர்கள் கேள்வி கேட்க அதற்கு எதிரி சொன்ன பதிலை பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். மேற்படி வாக்குமூலம் முழுவதும் கேள்வி பதிலாக பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். எதிரி கிஷோர் எதில் வந்திருந்தார் என்றால் இருசக்கரவாகனத்தில் வந்தார். கிஷோர் ஓட்டிவந்த

இருசக்கரவாகனம் என்ன ஆனது என்றால் போலீசார் எடுத்து சென்றனர். பின்னர் எதிரி அடையாளம் காட்டுவதற்காக எதில் சென்றார் என்றால் போலீஸ் ஜீப்பில் அழைத்து செல்லப்பட்டார். அப்பொழுது கிஷோர் ஏதேனும் செல்போன் வைத்திருந்தாரா என்றால் வைத்திருந்தார். மேற்படி செல்போனை போலீசார் கைப்பற்றினார்களா என்றால் கைப்பற்றினார்கள். எதிரி இம்ரான் அந்த இடத்தில் உள்ளதை எவ்வாறு போலீசார் தெரிந்துகொண்டார்கள் என்றால் கிஷோர் போன்மூலம் இம்ரானுக்கு போன் செய்து தெரிந்துகொண்டார்கள். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஏதேனும் கைப்பற்றினார்களா என்றால் அதுபற்றி தெரியாது. நான் சொன்னதுபோல் வாக்குமூலத்தில் கையெழுத்திட்டதாக கூறுவது பொய் என்றும் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு தற்பொழுது பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, 3சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர், பெருந்துறை.

Signature of the Witness

Name of the Interpreter
Tmt.K.S.Shabeena, B.A.B.L.
Judicial Magistrate,
Perundurai.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the-----day of --------------2021.

Signature of Interpreter